செய்தி வெளியீடு எண்: 50/2016 நாள்: 29.07.2016

# விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள இளைஞர்களுக்கு 6 மாத கால தொழில் திறன் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. 18 வயது முதல் 25 வயது வரை உள்ள தகுதியான இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எம்.லக்ஷ்மி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

*****

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழக சட்டமன்றப் பேரவையில் அறிவித்தவாறு **“அம்மா திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டம்”** என்ற பயிற்சி திட்டம் மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக செயல்படுத்துவதற்கான அரசாணைகள் பெறப்பட்டு உள்ளன.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் பணியாளர்கள் கிடைப்பதில் பற்றாக்குறை நிலவுவதால் மேற்படி நிறுவனங்கள் பணியாளர்களுக்குத் தேவையான தொழில் திறன் பயிற்சி கொடுத்து, பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில்

1. அழகுக்கலை
2. பேப்ரிகேஷன்
3. மெடிக்கல் & நர்சிங்
4. C.N.C டர்னிங் & மில்லிங்
5. ரீடெயில் சேல்ஸ் பெர்சன்ஸ்
6. ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ் உற்பத்தி
7. உணவு பொருள் உற்பத்தி & பதப்படுத்துதல்
8. கரும்பு மற்றும் சர்க்கரை பதப்படுத்துதல்
9. பிரிண்டிங்
10. DTP

போன்ற தொழில் இனங்களில் 6 மாத கால பயிற்சி வழங்கி, பயிற்சி நிறைவு பெற்றதும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் பணியமர்த்தப்படும் விதத்தில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறும் நபர்களுக்கு தமிழக அரசு பயிற்சி உதவித் தொகையாக மாதம் ஒன்றுக்கு தலா ரூ.5000/– வழங்கப்படும்.

எனவே, ஆர்வமுள்ள 18 முதல் 25 வயது வரை உள்ள ஆண், பெண் இருபாலரும் தங்களது **பிறந்த தேதி, வயது, கல்வித்தகுதி, ஜாதிச்சான்று, ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டை** ஆகிய நகல்களுடன் **பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், விழுப்புரம், மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம், விழுப்புரம்** என்ற முகவரியில் நேரடியாகவோ அல்லது www.dicvpm.in என்ற இணையதளத்தில் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்தோ 5.8.2016க்குள் மாவட்டத் தொழில் மையம், விழுப்புரம் அலுவலகத்திற்கு விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.*எம்.***லக்ஷ்மி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.